குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**DVC.No.7/2022**

வழக்கு சாட்சி எ.ம.சா.1

2026ம் ஜூலை மாதம் 7 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 07 .07.2026

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள எமசா.1 ஆவணத்தில் என்ன வியாதிக்காக மருத்துவமனைக்குச் சென்றேன் என்ற விபரம் அதில் இல்லை என்று சொன்னால் சரிதான். எமசா.2 ஆவணத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சிகிச்சை குறிப்பு என்றால் சரிதான். எமசா.2 04.12.2024ம் தேதி மருத்துவ குறிப்பில் no specific complaint என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.05.2025, 02.08.2025, 01.09.2025, 01.12.2025, 03.01.2026, 02.03.2026, 03.04.2026ஆகிய தேதிகளில் No complaint. Nil complaint மற்றும் No Sleep disturbance என்று தான் உள்ளது, என்றும், நான் DVC வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு இந்த வழக்கிற்கு ஆதாரம்வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட மருத்துவபில்கள் என்றால் சரியல்ல. எமசா.3 ஆவணத்தில் நான் தானாக முன்வந்து எனது வேலையை வேண்டாம் என்று மின் அஞ்சல் மூலம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான், என்னுடைய மேனேஜர் நீங்களாக பேப்பர் போட்டுவிட்டுபோய்விடுங்கள் தப்பு பண்ணினால் தான் கம்பெனி வேலையை விட்டு தூக்கும் என்றதால் நான் அவ்வாறு மின் அஞ்சல் அனுப்பினேன்.எமசா.6 அனைத்தும் ஜெராக்ஸ் காப்பி என்றால் இணையவழி மூலமாக எடுத்தேன். எமசா.6 ல் உள்ள ஆவணத்திற்கும் மனுதாரர்க்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல மனுதரரே அந்த கல்லூரியல் பணிபுரிவதாக ஒப்புக்கொண்டுள்ளார். எமசா.7,8,9 நகைகள் வாங்கியதற்காக ரசீதுகள் அதில் குறிப்பிட்டுள்ள நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல மனுதாரர் பெங்களூரில் என்னிடம் சண்டையிட்டுக்கொண்டு வங்கிக்கு சென்று அந்த நகைகளை எடுத்துக்கொண்டார். ரிஸிஸ்டரில் கையொப்பம் செய்து எடுத்துக்கொண்டார். அந்த வங்கியின் சாவி அவரிடம் தான் உள்ளது. மனுதாரர் பெங்களூரில் என்னிடம் சண்டையிட்டுக்கொண்டு வங்கிக்கு சென்று அந்த நகைகளை எடுத்துக்கொண்டார். ரிஸிஸ்டரில் கையொப்பம் செய்து எடுத்துக்கொண்டார் என்பது உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

எமசா.10, 11 மனுதாரருக்கு எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, மொபைல் மனுதாரர் தான் பயன்படுத்தினார். எமசா.14 சைக்கிள் வாங்கிய பில் தானா என்றால் சரிதான் அன்றைய தேதி 20.05.2021 என்றால் சரிதான். 20.05.2021ம் தேதி அந்த குழந்தைக்கு 5 மாதம் என்றால் சரிதான்.அப்போது தான்பெயர் வைத்தோம். எமசா.16 புகைப்படத்தில் அக்கா, அக்கா வீட்டுகாரர், அவர்களுடைய குழந்தை எங்களுடைய குழந்தை வீரன்னா உள்ளார்கள் என்றால் சரிதான். எமசா.21 டி என் ஏ சான்று தாக்கல் செய்துள்ளேன் அதில் அந்த குழந்தை எனக்கு தான் பிறந்தது என்று வந்துள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணைக்காக தாக்கல் செய்த பிரமாணப்பத்திரிக்கயைில் பாரா 6, 7, 8, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 சங்கதிகளில் மனுதாரருக்கு எதிராக கூறியுள்ளவைகள் உண்மைக்கு புறம்பானைவை அதை மனுதாரர் முற்றிலும் மறுக்கிறார் என்றால் சரியல்ல. நான் மனுதாரரைமனதளிலும், உடலலவிலும் கொடுமைப்படுத்தினேன் என்றும் அதனால் தான் மனுதாரர் சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகாரத்து கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு சட்டப்படியான கணவர் என்ற முறையிலும், அந்த குழந்தைக்கு நான் அப்பா என்ற முறையில் அவர்களுக்கு சட்டப்படி ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல, நான் வேலைக்கு செல்லவில்லை மனுதாரர் தான் எனக்கு கொடுக்கவேண்டும். நான் தற்போதும் வீட்டில் இருந்து கொண்டு வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல.